**அமெரிக்க இராஜாங்க திணைக்களம்**
**ஊடகப் பேச்சாளர் அலுவலகம்**

---

உடனடி வெளியீட்டுக்காக

தகவல் பத்திரம்

மே 1, 2020

# தகவல் மேம்படுத்தல்: COVID-19 இற்கான பதிலளிப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் தலைமை வகிக்கும் அமெரிக்கா

COVID-19 தொற்றுப் பரவலுக்கு முகம்கொடுத்துள்ள நிலையிலும் அமெரிக்க மக்களின் தாராள மனப்பான்மை மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கை ஆகியவற்றின் ஊடாக உலகளாவிய தலைமைத்துவத்தை அமெரிக்க தொடர்ந்தும் நிரூபித்து வருகிறது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இந்த தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டங்கள் மாதக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், உயிரை பாதுகாக்கும் சுகாதார மற்றும் மனிதாபிமான உதவிகளிலான தசாப்த கணக்கிலான தலைமைத்துவத்தின் அடிப்படையில் உலகளாவிய பதிலளிப்பு முயற்சிகளுக்கான மிகப்பெரிய தனியொரு நன்கொடையாளி நாடாக அமெரிக்கா தொடர்ந்தும் இருந்து வருகிறது.

COVID-19 பரவத் தொடங்கியதிலிருந்து அவசர சுகாதார, மனிதாபிமான, பொருளாதார மற்றும் அபிவிருத்தி உதவிகளுக்காக குறிப்பாக, அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த தொற்றுப் பரவலுக்கு எதிராக போராடுவதற்கு உதவுவதை இலக்காகக் கொண்டு அமெரிக்க அரசாங்கம் 775 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட தொகையை வழங்கியுள்ளது. காங்கிரஸினால் வழங்கப்பட்ட இந்த நிதியளிப்பானது 120 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பொது சுகாதார கல்வியை மேம்படுத்தல், சுகாதார பராமரிப்பு வசதிகளை பாதுகாத்தல், மற்றும் ஆய்வுக்கூட, நோய்-கண்காணிப்பு மற்றும் உடனடி பதிலளிப்பு ஆற்றலை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் உயிர்களை பாதுகாக்கும்.

இராஜாங்க திணைக்களம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பினால் (USAID) இதுவரை வழங்கப்பட்ட COVID-19 உதவிகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- **USAID இன் தொற்றுநோய் பரவல்களுக்கான உலகளாவிய சுகாதார அவசர கையிருப்பு நிதியம் மற்றும் உலகளாவிய சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்கு ஆகியவற்றிடமிருந்து சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர சுகாதார உதவி.** COVID-19 பாதிப்புள்ள மற்றும் ஆபத்துள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மட்டுப்படுத்துவதற்கும் சமூகங்களை தயார்படுத்துவதற்குமான இடையீடுகளை இந்த நிதிகள் முன்னுரிமைபடுத்துகின்றன.
- **USAID இன் சர்வதேச பேரிடர் உதவி (International Disaster Assistance) கணக்கில் இருந்து சுமார் 300 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவி.** இந்த நிதிகளானது தற்போதைய மனிதாபிமான நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. இடம்பெயர்ந்த மக்களின் நோய்த் தொற்றுக்கான அதிகரித்த ஏதுநிலை, முகாம்கள் மற்றும் முறைசாரா குடியேற்றங்களில் காணப்படும் கடுமையான நோய்ப்பரவல்களுக்கான அதிகரித்த ஆபத்து மற்றும் இந்த மக்களின் மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட நிலையற்ற இறப்பு வீதம் ஆகியவற்றின் காரணமாகவே அம்மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

- **பொருளாதார உதவி நிதியத்தில் (Economic Support Fund) இருந்து 150 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகை.** பல்வேறுபட்ட துறைகள் முழுவதும் குறுகியகால மட்டுப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவுவதன் மூலமும் தொற்றுப்பரவலில் இருந்தான இரண்டாம்-நிலை தாக்கங்களை நீண்டகால அடிப்படையில் தீர்ப்பதன் மூலமும் இந்த நிதிகளானது அமெரிக்க வெளியுறவுக் கொள்கை நலன்களை ஊக்குவிக்கும்.
- **புலம்பெயர்வு மற்றும் அகதிகள் உதவி (Migration and Refugee Assistance) கணக்கில் இருந்து 130 மில்லியன் டொலருக்கும் அதிகமான மனிதாபிமான உதவி.** இது இராஜாங்க திணைக்களத்தின் சனத்தொகை, அகதிகள், மற்றும் புலம்பெயர்வு பணியகத்தின் ஊடாக வழங்கப்பட்டதாகும். அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், மற்றும் புகலிடமளிக்கும் சமூகங்களிலும் அதேபோல், உலகளாவிய மற்றும் உள்நாட்டு மனிதாபிமான பதிலளிப்பு நடவடிக்கைகளிலான புலம்பெயர்ந்த ஏனையோர் மற்றும் பாதிக்கப்படும் ஏதுநிலை கொண்ட ஏனைய மக்களிலும் இந்த தொற்றுப்பரவலினால் ஏற்படுத்தப்படும் சவால்களை தீர்ப்பதற்கு சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பங்காளர்களுக்கு இந்த நிதிகள் உதவும்.

கடந்த தசாப்தத்தில் மாத்திரம் அமெரிக்காவினால் வழங்கப்பட்ட 100 பில்லியன் டொலருக்கும் அதிகமான உலகளாவிய சுகாதார நிதியளிப்பு மற்றும் சுமார் 70 பில்லியன் டொலர் வெளிநாட்டு மனிதாபிமான உதவி ஆகியவற்றுக்கு மேலதிகமாகவே இந்த புதிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் நேரடி நிதியளிப்புக்கு மேலதிகமாக எமது All-of-America அணுகுமுறையானது அமெரிக்க தனியார் வர்த்தகங்கள், இலாப நோக்கற்ற குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், நம்பிக்கை அடிப்படையிலான அமைப்புகள், மற்றும் தனிநபர்களின் தாராள மனப்பான்மையின் ஊடாக உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு உதவி வருகிறது. மொத்தத்தில், உலகளாவிய COVID-19 பதிலளிப்பு நடவடிக்கைகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நன்கொடைகள் மற்றும் உதவிகளில் சுமார் 6.5 பில்லியன் டொலர் மதிக்கத்தக்க தொகையை அமெரிக்கர்கள் வழங்கியுள்ளனர்.

மிகுந்த அவசர தேவைகளை பூர்த்தி செய்யும் நிமித்தம், செயல்விளைவுக்கான திறனை அதிகரிப்பதற்கான வெளிநாட்டு உதவிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான முயற்சிகளை அமெரிக்க அரச திணைக்களங்களும் முகவரமைப்புகளும் ஒருங்கிணைப்பு செய்துவருகின்றன. இராஜாங்க திணைக்களம் மற்றும் USAID ஊடாக பின்வரும் உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது:

- விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், புதிய பங்காண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு, மற்றும் பிறவற்றுக்கும் உதவியளிக்கும் திட்டங்களுக்காகவும் உட்பட உலகளாவிய மற்றும் பிராந்திய திட்டச் செயலாக்கதில் சுமார் 35.5 மில்லியன் டொலர் சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக உலளாவிய ரீதியில் வழங்கப்பட்டு வருகிறது.
- அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், மற்றும் புகலிடமளிக்கும் சமூகங்களில் இந்த தொற்றுப்பரவலினால் ஏற்படுத்தப்படும் சவால்களை தீர்ப்பதற்கு COVID-19 இற்கான உலகளாவிய பதிலளிப்பு நடவடிக்கைகளுக்காக புலம்பெயர்வு மற்றும் அகதிகள் உதவியின் கீழ் 8 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவி.
- USAID இன் ஜனநாயகம், முரண்பாடு, மற்றும் மனிதாபிமான உதவிக்கான பணியகத்துக்கான 5 மில்லியன் டொலர் பொருளாதார உதவி நிதியானது குடிமக்களை மையமாகக் கொண்ட ஆளுகையை ஊக்குவிப்பதற்கும், ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்புகளுக்குமான சட்டப் பாதுகாப்புகளை கண்காணிப்பதன் மூலம் ஊடக மற்றும் சிவில் சுதந்திரங்களுக்கு மதிப்பளிக்கவும், உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு COVID-19 சம்பந்தமான அவசர சட்டங்கள் பயன்படுத்தப்படும் இடங்களில் சட்ட உதவிகளை வழங்கவும், பொது சுகாதார பதிலளிப்புகள் பாரபட்சமற்று இருப்பதையும் COVID-19 சம்பந்தமாக ஓரங்கட்டப்பட்ட குழுக்களை பழிச் சொல்லுதல் அல்லது களங்கம் ஏற்படுத்தலுக்கு எதிரான பதில் முயற்சிகளையும் உறுதிப்படுத்தவும், ஊடக நேர்மைத்தன்மை மற்றும் COVID-19 பற்றி பொறுப்பான தகவல்கள் வழங்கப்படுவதை

ஊக்குவிக்கவும், தவறான தகவல்களை எதிர்க்கவும், சுயாதீன ஊடக நிறுவனங்களின் நிதிசார் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும், மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் அவர்களது முக்கியமான பணியை முன்னெடுத்துச் செல்ல உதவி வழங்குவதற்கும் சிவில் சமூக அமைப்புகளுக்கு உதவும்.

- வர்த்தகங்களை விஸ்தரிக்கவும் கல்விக்கான வாய்ப்புக்காகவும் USAID இன் பொருளாதார வளர்ச்சி, கல்வி, மற்றும் சுற்றுச்சூழல் பணியகத்துக்கு சுமார் 4.3 மில்லியன் டொலர் பொருளாதார உதவி நிதி. சுமார் 750,000 டொலரைக் கொண்டு USAID ஆனது COVID-19 இற்கான கல்வி பதிலளிப்புகள் தொடர்பில் பங்காளி அரசாங்கங்களுக்கும் USAID பணிமனைகளுக்கும் தொழில்நுட்ப உதவி மற்றும் எழுச்சி திறனை வழங்கும் என்பதுடன், நெருக்கடியின் போதான தொலைதூர கற்றல் தொடர்பான உலகளாவிய செயற்குழுவொன்றையும் உருவாக்கும். அத்துடன், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான கல்வி தொலைதூர கற்றலுக்கான மெய்நிகர் நிலையமொன்றையும் அது ஆரம்பிக்கும். 3.5 மில்லியன் டொலரை கொண்டு USAID ஆனது மருத்துவ சாதனங்கள் மற்றும் பரிசோதனை கருவிகள் தொடர்பான வர்த்தக தடைகளை குறைப்பதற்கு பங்காளி அரசாங்கங்களுக்கு உதவுவதற்காக உலகளாவிய அரச-தனியார் பங்காண்மையொன்றுக்கு உதவும் என்பதுடன், மருத்துவ உபகரணங்களுக்கான சர்வதேச தரங்களை அரசாங்கங்கள் பின்பற்றுவதையும் மேம்படுத்தும்.
- USAID இன் மீளெழுச்சி திறன் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான பணியகத்துக்கான 8 மில்லியன் டொலர் பொருளாதார உதவி நிதிகளானது உலகளாவிய உணவு மற்றும் விவசாய முறைமைக்கான தொற்றுநோய் சம்பந்தப்பட்ட அதிர்ச்சிகளை தணிப்பதற்கான பல்தரப்பு-பங்காளர் முயற்சியொன்றுக்கு உதவும். வளர்ந்துவரும் நாடுகளில் இந்த தொற்றுப்பரவலுக்கான சில கொள்கை பதிலளிப்புகளானது ஏற்கனவே உள்நாட்டு உணவு முறைமைகளை எதிர்மறையாக பாதிப்பதுடன், உணவுப் பாதுகாப்பின்மை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என்பன பற்றிய கவலைகளும் அதிகரித்துள்ளன. முன்னேற்றம் நோக்கிய கொள்கைகளை நடைமுறைப்படுத்த நாடுகளுக்கு உதவுவதற்கு தரவு மற்றும் பகுப்பாய்வுகளை தயாரிக்கவும், உணவு மற்றும் விவசாயம் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்கள் தங்களது வர்த்தக வடிவங்களை மாற்றுவதற்கும் மற்றும் மிகவும் கடுமையான தாக்கங்களை தாங்கிக் கொள்வதற்கும் உதவவும், மற்றும் COVID-19 இற்கு மத்தியிலும் உணவு மற்றும் விவசாய நடவடிக்கைகளிலும் சந்தைகளிலும் எப்படி நுகர்வோர் பாதுகாப்பாக கலந்துகொள்ள முடியும் என்பது பற்றி வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் துரிதமாக தகவல்களை பரப்பவும் USAID செயற்படும். சிறிய மற்றம் நடுத்தர அளவிலான உணவு மற்றும் விவசாயம் சார்ந்த வர்த்தகங்களுக்கான நிதியளிப்பை திறப்பதற்கு நிதித்துறை பங்காளர்களுடன் ஒத்துழைப்பில் ஈடுபடுவது இந்த பங்காண்மையில் அடங்குகிறது.
- பாலின அடிப்படையிலான வன்முறைகளில் இருந்து தப்பிப்பிழைத்தவர்கள் அவசர உதவி, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகள், மற்றும் நீதியை அணுகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2 மில்லியன் டொலர் பொருளாதார உதவி நிதியானது இராஜாங்க செயலாளரின் உலகளாவிய பெண்கள் விவகார அலுவலகத்துக்காக திட்டமிடப்பட்டுள்ளது. பாலின பொருளாதாரம், ஆளுகை, மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் COVID-19 தொற்றுப்பரவலுடன் குறிப்பாக சம்பந்தப்பட்டுள்ளது என்ற வகையில் அதன் பாதுகாப்பு விளைவுகள் என்பன பற்றிய ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு பிரசாரங்களுக்கு ஆதரவளிப்பதையும் இந்த நிதியளிப்புகள் நோக்காகக் கொண்டுள்ளன.
- ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் மனிதாபிமான அலுவல்கள் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா. அலுவலகம் (UN Office for the Coordination of Humanitarian Affairs) என்பன உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளுக்கான மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பகமான பங்களிப்பாளராக அமெரிக்கவே இருக்கிறது. உலகளாவிய மனிதாபிமான, அபிவிருத்தி, சமாதான உருவாக்கம், மற்றும் பிற நடவடிக்கைகளை இயங்கச் செய்யும் செயற்பாடுகளுக்கு உதவும் மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பை தக்கவைக்கும் மைய செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டங்களிலான குறிப்பிடத்தக்க முதலீடுகள் இந்த பங்களிப்புகளில் உள்ளடங்குகின்றன.

*இந்த நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையிலான அமெரிக்க அரசாங்கத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட நிதியளிப்பு தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து* *F-Press@state.gov* *உடன் தொடர்பு கொள்ளவும்.*

*குறித்தவொரு நாடொன்றிலான பதிலளிப்பு செயற்பாடுகள் தொடர்பான விபரங்களுக்கு தயவுசெய்து* *press@usaid.gov* *ஊடாக* USAID *ஐ தொடர்பு கொள்ளவும்.*

COVID-19 *பதிலளிப்புக்கான புலம்பெயர்வு மற்றும் அகதிகள் உதவியின் கீழான மனிதாபிமான உதவி பங்களிப்புகள் தொடர்பான விபரங்களுக்கு தயவுசெய்து* *PRM-Press@state.gov* *ஊடாக இராஜாங்க திணைக்களத்தின் சனத்தொகை, அகதிகள், மற்றும் புலம்பெயர்வு பணியகத்தை தொடர்பு கொள்ளவும்.*